

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 337 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 01 – திங்கள்கிழமை 17 ஜூலை 2023 – மதுரை 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 337 : Thiruvalluvar Year - 2054 - Aadi 01 - Monday 17 July 2023 - Madurai 16+8 Pages ₹ 5.00







முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில், 2, 13, 338 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்; அதனையொட்டியே - இந்த

# கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

## மதுரையில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**மதுரை, ஜூலை 17 -**

**திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம் தான்; அதனையொட்டியே இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகம் என்று மதுரையில் உலகத் தரத்தில் கட்டப்பட்ட நூலகத்தை திறந்து வைத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரை ஆற்றுகையில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித் துறை வளாகத்தில் தரைத் தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியின் இரு கண்கள் என நான் அடிக்கடி சொல்வது, கல்வியும் சுகாதாரமும்தான்.

அதனால் தான், கலைஞர் நூற்றாண்டு தொடக்கமான கடந்த ஜூன் மாதம்

15ஆம் தேதி அன்று கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை சென்னை, சைதாப்பேட்டை, கிண்டியில் திறந்து வைத்தேன். ஒரு மாதம் கழித்து ஜூலை 15ஆம் நாளான இன்றைக்கு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்திருக்கின்றேன். அந்த பெருமிதத்தோடு இங்கு வந்துள்ள அனைவரையும் நான் வருக, வருக, வருக என வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நீர்வளத்துறை அமைச்சர் என்னுடைய ஆருயிர் அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே! சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பெருமை சேர்த்திருக்கக்கூடிய எச்.சி.எல். நிறுவனத்தினுடைய ஷிவ் நாடார் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களே, எச்.சி.எல். குழுமத்தின் தலைவர் திருமதி ரோஷினி அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே! மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! சிறப்பு அழைப்பாளர்களே! ஆசிரியர் பெருமக்களே! எழுத்தாளர்களே! வாசகர்களே! என் பாசத்திற்கும் பேரன்புக்கும் உரிய மாணவச் செல்வங்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய இனிய நண்பர்களே, என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் சென்னையில் மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும்.

இவை இரண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள்!

தமிழ்நாட்டினுடைய தலைநகர் சென்னை என்றால், இந்த மதுரை, தமிழ்நாட்டினுடைய கலைநகர்!

**அண்ணா நூற்றாண்டு நூலகமும் - கலைஞர் நூற்றாண்டு நூலகமும்!**

தலைநகரில், தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தார் அவர் தம்பி கலைஞர்!

**சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் சென்னையில் மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும். இவை இரண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள்! தமிழ்நாட்டினுடைய தலைநகர் சென்னை என்றால், இந்த மதுரை, தமிழ்நாட்டினுடைய கலைநகர்!**

இன்று அந்த தலைவர் கலைஞரின் நூற்றாண்டில், இந்தக் கலைநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் எனும் தென் தமிழ்நாட்டின் அறிவாலயத்தை இந்த அடியேன் அமைத்திருக்கிறேன்.

இந்த நூலகத்தை திறந்து வைக்கக்கூடிய பெரும் வாய்ப்பும், பெருமையும் எனக்கு கிடைத்திருப்பதை எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இந்த மாமதுரையில் சங்ககால இலக்கியங்களை சாமானியருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் சங்கத்தமிழ் இயற்றிய மாமதுரையில் நூலகம் வைக்காமல் வேறு எங்கு வைக்க முடியும்.

சிலப்பதிகாரம் குறித்தும் காற்சிலம்போடு நீதி கேட்ட கண்ணகி குறித்தும் முத்தமிழறிஞர் கலைஞர் தீட்டாத எழுத்து ஓவியங்கள் இல்லை. `அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என அறச்சீற்றம் கொண்டு கண்ணகி எரித்திட்ட இந்த நகரத்தில் இலட்சக்கணக்கான நூல்கள் கொண்ட இந்த நூலகத்தினால் அறிவுத் தீ பரவ போகிறது! திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்!

**அரசியல் இயக்கம் மட்டுமல்ல ; அறிவியக்கம்!**

தமிழ்ச் சமுதாயத்தோட எழுச்சிக்கும், மீட்சிக்கும் தேவையான கருத்துக்களை எழுதி, பேசி, படித்து வளர்ந்தவர்கள்தான் திராவிட இயக்கத்தினர்! திராவிட முன்னேற்றக் கழகத்தோட தலைமைக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அதற்கு அறிவகம் என்று பெயர் வைத்தார். சென்னை, அண்ணா சாலையில் புதிதாக தலைமைக் கழகத்தை அமைத்த தலைவர் கலைஞர் அவர்கள் 'அண்ணா அறிவாலயம்' என்று பெயர் வைத்தார்கள். ஏனென்றால், இது அரசியல் இயக்கம் மட்டும் இல்லை! அறிவியக்கம்!

படிப்பகங்களால் வளர்ந்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இன்று பிரம்மாண்டமான நூலகங்களை கட்டியெழுப்பிக் கொண்டு இருக்கிறோம். 2 லட்சத்து 13 ஆயிரத்து 338 சதுர அடி பரப்பளவில், 120 கோடியே 75 இலட்ச ரூபாய் மதிப்பில் இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அழகாகவும், அற்புதமாகவும் உருவாக்கிக் கொடுத்த எதிலும் வல்லவர் என்று அழைக்கப்படும், நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களையும், மாணவர்களின் நெஞ்சம் அறிந்த அன்பு தம்பி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

பொதுப்பணி மற்றும் பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் உள்ளிட்ட இந்த நூலகம் இவ்வளவு பிரம்மாண்டமாக அமைய கடுமையாக உழைத்திருக்கக்கூடிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

# பெங்களூருவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்!

## இன்றும், நாளையும் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 17 -

பெங்களூரில் இன்றும், நாளையும் (ஜூலை 17, 18 தேதிகளில்) எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்.

கூட்ட ஏற்பாடுகளை கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா நேற்று ஆய்வு செய்தார்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் இரண்டாம் கட்ட ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் இன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்.

வரும் மக்களவைத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க.வுக்கு எதிராக ஓரணியாக போட்டியிட எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதன்படி, எதிர்க்கட்சித் தலைவர்களின் முதல் ஆலோசனை கூட்டம் பீகார் தலைநகர் பாட்னாவில் கடந்த ஜூன் 23ம் தேதி நடைபெற்றது. பீகார் முதல்வர் நிதிஷ் குமார் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ் வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் உள்ளிட்ட 17 கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சிகளின் அடுத்த ஆலோசனைக் கூட்டம் இன்று மற்றும் நாளை பெங்களூரில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் அனுப்பி உள்ளார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார். இந்நிலையில், பெங்களூருவில் இன்று தொடங்கும் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்ட ஏற்பாடுகளை கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரன்தீப்சிங் சுர்ஜேவாலா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

### எம்.பி.பி.எஸ். - பி.டி.எஸ்.

# மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, ஜூலை 17 –

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்.

7.5% இடஒதுக்கீட்டில் சேலம் மாணவி கிருத்திகா முதலிடம் பிடித்தார். அரசு ஒதுக்கீட்டு தரவரிசைப் பட்டியலில் விழுப்புரம் மாணவர் பிரபஞ்சன் முதலிடம் பிடித்தார்.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வெளியிட்டார்.

2023 – 2024 கல்வியாண்டில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கான அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள நிர்வாக மருத்துவ இடங்கள் ஆகியவற்றில் சேருவதற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் கடந்த மாதம் 28ஆம் தேதி முதல் இம்மாதம் 12ஆம் தேதி வரை பெறப்பட்டது. மொத்தம் 40 ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்நிலையில், தகுதி பெற்ற மாணவ – மாணவிகளின் தரவரிசை பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துமனையில் நடைபெற்ற நிகழ்வில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகிய இருவரும் கலந்து கொண்டு தரவரிசை பட்டியலை வெளியிட்டனர். இதில், 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் சேலம் அரசுப் பள்ளி மாணவி கிருத்திகா முதலிடமும், அரசு ஒதுக்கீட்டு தரவரிசைப் பட்டியலில் விழுப்புரம் மாணவர் பிரபஞ்சன் முதலிடமும் பிடித்தனர்.